# அலகு 2

## பாலின தன்னடையாளமும் சமூக இயல்பினராக்கும் செயலும்

**பாலின தன்னடையாளம்**

குறிப்பிட்ட ஹார்மோன் மூலம் தோன்றும் உள்ளார்ந்த உணர்வுகளின் அடிப்படையில் தன்னை ஆண் அல்லது பெண் என உணர்தலோடு தனது நடத்தை மற்றும் நடையுடை பாவனை மூலம் சமூகத்தில் உள்ள பிறரையும் அவ்வாறே உணரச் செய்தலாகும்.

**சமூக இயல்பினராதல்**

ஒரு சமூகக்குழுவில் வளரும் குழந்தை அக்குழுவில் உள்ள பிற உறுப்பினர்களோடு பல்வேறு சூழ்நிலைகளில் இடைவினைகள் ஆற்றி அக்குழுவின் பழக்க வழக்கங்கள் மனப்பான்மைகள் விழுமங்கள் நம்பிக்கைகள் சம்பிரதாயங்கள் போன்றவற்றை தனதாக்கிக்கொள்ளும் செயல்முறையே சமூகஇயல்பினராதல்.

**பாலின தன்னடையாளம் :**
**குடும்பத்திலுள்ள சமூகவியல்பாக்கும் நெறிமுறைகள்**

- குடும்பமே குழந்தையின் வளர்ச்சிப் பாதையின் தொடக்கமாக உள்ளது.
- பெற்றோரிடமிருந்தே குழந்தைகள் பேசும் முறை உடைஅணியும் முறை எதிர்பாலினத்தவரிடம் நடந்து கொள்ளும்முறை மற்றும் பிற பழக்கவழக்கங்களை அறிந்து கொள்கின்றனர்.
- குழந்தை தனது பால் தொடர்பான கற்பிதங்களை தன் மூத்த உடன்பிறந்தவர்களை முன்மாதிரியாகக் கொண்டே கற்கின்றனர்.

**பாலின தன்னடையாளமும் பள்ளியும்**

- பள்ளிகள் குழந்தைகளின் மனப்பான்மைகளை மாற்றியமைப்பதன் மூலம் மாணவர்களின் புறநடத்தைகளை சமூகம் ஒப்புக்கொள்ளும் வகையில் மாற்றியமைக்கின்றன.
- மாணவர்களிடம் முழு ஆளுமை வளர்ச்சி ஏற்பட பள்ளிகள் நன்கு திட்டமிட்டு செயல்படுகின்றன.
- பாலினம் சார் பங்கு பணிகளை கற்பிப்பதில் பள்ளியே முக்கியத்துவம்

பெறுகிறது.

- பள்ளி அமைப்பு முறையே சமூகம் முழுவதும் பாலினம் சார் கற்பிதங்கள் இருப்பதைக் காட்டுகிறது.

**பாலின தன்னடையாளமும் பள்ளியில் பாலின சமத்துவத்தை மேம்படுத்தும் வழிமுறைகளும்**

- பள்ளிகள் குழந்தையின் வசிப்பிடங்களுக்கு அருகாமையில் இருத்தல்
- பள்ளிகள் மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்
- பள்ளி கலைத்திட்டம் மற்றும் பாடநால் பெண்களுக்கெதிரான ஒருபுறச்சார்புத்தன்மையை கொண்டிராமல் இருத்தல்
- பள்ளியில் பெண்களுக்கு தனி கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தித்தருதல்
- பள்ளியைப் பெண்கள் எளிதாக அணுகும் வண்ணம் மாணவிகளுக்கு சமவாய்ப்புகளும் வசதிகளும் கிடைத்திட வழிவகை செய்தல்

**பாலினசமத்துவத்தை வலுப்படுத்துதலில் ஒப்பார் குழுவின் பங்கு**

- பள்ளிக்குள்ளும் பள்ளிக்கு வெளியேயும் அமையும் ஒத்த வயதுடைய ஒரே சமூகப்பின்னணி கொண்ட குழுக்கள்
- குழுவில் பாலின சமத்துவம் ஏற்படல்
- குற்றச் செயல்பாடுகளில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல்
- பாடஇணை மற்றும் கல்வி இணை செயல்பாடுகளில் ஒப்பார் குழுவினர் இணைந்து செயல்படுவதால் பாலின பாகுபாடு குறைகிறது.

**பாலினசமத்துவத்தை வலுப்படுத்துதலில் ஆசிரியரின் பங்கு**

- பாடத்திட்ட செயல்பாடுகளில் மாணவ மாணவியர்களுக்கிடையே இடைவினை வடிவமைப்பதால் சமூகமயமாதல் அமைகிறது.
- வகுப்பறை நிர்வாகம் மற்றும் சுத்தம் செய்தல் போன்ற செயல்பாடுகளிலும் பாடஇணை செயல்பாடுகளிலும் மாணவ மாணவிகள் இணைந்து குழுவாகச் செயல்பட வைத்தல்.
- வகுப்பறையில் மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்தும் போது சமமான முறையினை பின்பற்றி வேற்றுமைகளைக் களையலாம்.

**பாலினசமத்துவத்தை வலுப்படுத்துதலில் கலைத்திட்டத்தின் பங்கு**

- ஆண் பெண் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காகவே கலைத்திட்டம்

அமைய வேண்டும்.

- ஆண்களுக்கு ஏற்புடையவை பெண்களுக்கு ஏற்புடையவை என பாடத்திட்டத்தை பிரிக்கக்கூடாது.
- கலைத்திட்டம் கல்வியின் செயல்நோக்கு பாடப்பொருள் கால அளவு கற்பிக்க வேண்டிய முறைகள் செய்முறைப்பயிற்சி மதிப்பிடும் முறைகள் கல்விச்சூழல் போன்றவற்றை வரையறுக்கிறது.

**பாலின தன்னடையாளத்தை அளவிடல்**

பாலின ஆய்வுக்ள ஆண்இயல்பு பெண்இயல்பு என்னும் ஓர் இயல்பின் நேர்கோட்டுத்தொடரின் இரு எதிரெதிர் முனைகளே – ஒற்றைப்பரிமாணக்கொள்கை

ஆண்தன்மை பெண்தன்மை என்பவை வேறுபட்ட நேர் எதிரெதிர் பரிமாணங்கள் என்றும் இவை ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு அளவில் அமைந்திருக்கும் இவையே இரு பரிமாணக்கொள்கையாகும்.

பன்முக இயல்புகளை உள்ளடக்கிய ஆண்தன்மை மற்றும் பெண்தன்மை என்னும் இரு பரிமாணங்களைக் கொண்டு பாலின தன்னடையாளத்தை அளவிடும் இரு கருவிகள் தற்போது பாலின ஆய்வுகளில் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன.

**ஸான்ட்ரா எல் பெம்** - 1974 – அமெரிக்க உளவியலாளர்- பெம் பாலியல்புப் பட்டியல்

**பெம் பாலியல்புப்பட்டியல்**

இதில் 60 ஆளுமைப்பண்களையும் சோதனையில் பங்குபெறுவோர் படித்து தரவரிசைப்படுத்தி 7 தரநிலை அளவுகோலில் குறிப்பிட வேண்டும். ஆண்இயல்பு 20 பண்புகள் பெண் இயல்பு 20 பண்புகள் இரு பாலருக்கும் பொருந்தும் இயல்பு 20 ஆக மொத்தம் 60 உருப்படிகள்

**வகுப்பறை செயல்பாடுகளில் பாலின வேறுபாடு காட்டல்**

1. வகுப்பறைக்குள் வரும்போது மாணவிகள் கட்டாயம் எழுந்து நிற்க வேண்டும் என எதிர்பார்த்தல்
1. சீருடையை சரியானமுறையில் அணிய மாணவிகளுக்கே அதிகம்

வலியுறுத்துதல்

2. மாணவர்கள் வகுப்பறை கட்டுப்பாட்டை மீறவும் வெளியே சென்றுவரவும் அனுமதி தருதல்
3. பிரச்சனைகள் ஏற்படும் போது அதற்கு பெண்களை மட்டுமே குற்றம் சுமத்துதல்

**ஆண்கள் மற்றும் பெண்களை நெறிப்படுத்தும் உத்திகளின் செயல்பாடுகள்**

- சிறந்த நடத்தையைக் கண்டறிந்து பரிசளித்தல்
- இயற்கையான பின்விளைவுகளை அனுபவிக்கச் செய்தல்
- தர்க்கரீதியான பின்விளைவுகள்
- ஆண் பெண் வேறுபாடு காட்டும் சலுகைகளை நீக்கிடல்

**மாணவர்களிடம் ஒழுங்கினை தொடர்ந்து நிலை நிறுத்துவதற்கான ஆலோசனைக் குறிப்புகள்**

- மாணவர்களின் ஒழுக்கமுறைச் செய்யும் திட்டத்தை மாணவர்கள் அறியச்செய்தல்
- அனைவரையும் சமமாக மதித்தல்
- மாணவர்களின் நடவடிக்கைகளை தொடர்ந்து கவனித்து சீராக இருக்கச் செய்தல்
- குழந்தையின் முன்னேற்றத்திற்கு எது பொருத்தமானது என்பதை புரிந்து கொள்ளல்

**பாலினம் சார் பங்குபணிகள் தொடர்பான தவறான நம்பிக்கைகளை பகுத்தாராய்தல்**

பாலின கற்பிதங்கள் என்பவை ஆணும் பெண்ணும் சமூகத்தில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் தொடர்பான ஆதாரமற்ற நம்பிக்கைகளாகும்.

**ஆண்கள் தொடர்பான சில பாலின வார்ப்பட எண்ணங்கள்**

- ஆண்கள் வீரம்மிக்கவர்கள்

- தர்க்க ரீதியாக சிந்திப்பவர்கள்
- சகிப்புத்தன்மை குறைவாக உடையவர்கள்
- ஆக்ரோஷமானவர்கள்
- தனது உணர்ச்சிகளை வெளிக்காட்டாதவர்கள்
- அறிவான்மை மிக்கவர்கள்
- தொழில் புரிவதிலும் பொருளீட்டுவதிலும் நாட்டம் உடையவர்கள்
- முடிவெடித்து செயல்படுத்துவதில் அதிகத்திறமை கொண்டவர்கள்

**பெண்கள் தொடர்பான சில பொதுவார்ப்பட எண்ணங்கள்**

- பெண்கள் மென்மையானவர்கள்
- குழந்தைத்தனம் மிக்கவர்கள்
- நுண்ணறிவுமிக்கவர்கள்
- அடிக்கடி தன்னுடைய நிலைப்பாட்டைமாற்றிக் கொள்பவர்கள்
- எளிதில் உணர்ச்சிவயப்படுபவர்கள்
- பிறரிடம் எளிதில் நட்பு கொள்பவர்கள்
- பிறரைப்பேணுவதிலும் குழந்தை வளர்ப்பதிலும் ஆர்வம்மிக்கவர்கள்

**ஆண்களையும் பெண்களையும் நெறிப்படுத்துதலில் பாலின வேறுபாடு காட்டுதல்**

- மாணாக்கரிடம் காணப்படும் ஒழுங்கீனங்களைத் திருத்தி நெறிப்படுத்துதலில் இருபாலருக்கும் ஒரே மாதிரியான அளவுகோலைக் கொண்டு அணுக வேண்டும்.
- மாணவிகளுக்கு ஆசிரியைகளும் மாணவர்களுக்கு ஆசிரியர்களும் நெறிப்படுத்தும் பொறுப்பை ஏற்றிடலாம்.
- மாணாக்கரை நெறிப்படுத்த ஆசிரியர்களது முன்மாதிரி பங்களிப்பும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் ஒத்துழைப்பு பொறுப்புள்ள மாணவ – மாணவியரது உதவி ஆகியவை தேவைப்படுகின்றன.
- மாணவிகளுக்கு மாணவர்களுக்கு நிகரான இருக்கைகள் தருதல் விவாதங்களில் கலந்து கொண்டு சுதந்திரமாகக் கருத்துக் கூறல்

போன்றவை பாலின வேறுபாட்டைக் குறைக்கும்.

- எங்கு உரிமை தரப்படுகிறதோ அங்கு ஒழுங்கும் அதிகரிக்கும். மாணவ மாணவியர்களுக்கு உரிய உரிமைகளை சரியான முறையில் வழங்கினால் அவர்களிடம் பாலின வேறுபாடு இருக்காது.